வேலையில் உங்களது உரிமைகளைத் தெரிந்து கொள்ளல்

# ஒன்ராறியோவில் உள்ள அடிப்படை தொழில் நியமங்கள்

## ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்

ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் மூலம் உங்களது உரிமைகளை நீங்கள் கைவிட இயலாது.

தொழில் சட்ட நியமங்களுக்குக் குறைவான நிபந்தனைகளைக் கொண்ட ஒப்பந்தமொன்றில் நீங்கள் கைச்சாத்திட்டால் உங்களது முதலாளியே சட்டத்தினை மீறுகின்றார், நீங்கள் அல்ல. அவ்வாறு நீங்கள் கைச்சாத்திட்டாலும் கூட, சட்டத்தின்கீழான உரிமைகளுக்கு நீங்கள் தொடர்ந்தும் உரித்துடையவர்.

## அடிப்படை வேதனம்

உங்களது ஒவ்வொரு மணித்தியால வேலைக்கும் ஆகக் குறைந்தது அடிப்படை வேதனம் உங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். தொழிலாளர்களால் ஆற்றப்படும் எல்லாத் தொழில்களும் அடிப்படை வேதனத்தினைக் கொண்டிருப்பதில்லை. சில தொழில்கள் வித்தியாசமான கூலி வீதங்களைக் கொண்டிருக்கின்றன.

## சமமான வேலைக்கு சமமான ஊதியம்

2018, ஏப்ரல் 1ஆம் திகதியிலிருந்து தொழில்தருநர்கள் தொழில் அந்தஸ்தினை காரணம் காட்டி உங்களுக்குக் குறைவான ஊதியத்தினை வழங்க இயலாது. நீங்கள் பகுதிநேர, தற்காலிக, அமைய அல்லது பருவகால தொழிலாளர்களாக இருந்து, முழு நேரஊழியர்களினால் ஆற்றப்படும் அதே வேலையினை குறிப்பிடத்தக்களவு செய்யும் போது உங்களுக்குக் குறைவான சம்பளம் வழங்கப்பட முடியாது. நீங்கள் தற்காலிக ஏஜென்சி மூலமாக வேலைக்கு அமர்த்தப்பட்டு, முழுநேர ஊழியர்களினால் ஆற்றப்படும் அதே வேலையினைக் குறிப்பிடத்தக்களவு ஆற்றுமிடத்து உங்களுக்குக் குறைவான சம்பளம் வழங்கப்பட முடியாது. இது பற்றி கூடுதல் விபரம் அறிய எங்களை அழையுங்கள்.

## வாரத்திற்கான மணித்தியாலங்கள்

உங்களது முதலாளி வாரமொன்றிற்கு 48 மணித்தியாலங்களுக்கு மேலாக வேலை செய்யுமாறு உங்களைப் பணிக்க இயலாது. அவ்வாறு உங்களை அதற்கு மேலாக வேலை செய்யுமாறு கேட்க வேண்டுமாயின் உங்களை ஓர் எழுத்து மூலமான உடன்படிக்கையில் கையொப்பமிடுமாறு கேட்டு, அதற்கு தொழில் அமைச்சின் அனுமதியினைப் பெறல் வேண்டும். அதனை மறுப்பதற்கு உங்களுக்குச் சட்ட்ரீதியாக உரிமை உண்டு.

## நாளாந்த மணித்தியாலங்களும் இடைவேளையும்

ஒரு நாளைக்கு ஒரு குறிப்பிட்ட வேலையினை ஆற்றுவதற்குரிய அதிகூடிய மணித்தியாலங்கள் 13 ஆகும். ஒவ்வொரு 5மணித்தியால வேலைக்கும் 30 நிமிட நேர சம்பளமற்ற இடைவேளையினை இது உள்ளடக்குகின்றது. ஒரு நாளைக்கான சாதாரண வேலையினை விட மேலாக ஆற்றுமாறு முதலாளி உங்களை வற்புறுத்த இயலாது. உங்களை அதற்கு மேலாக நின்று வேலையினை ஆற்றுமாறு கேட்பதற்கான சில விதிவிலக்குகளும் உண்டு.

## மேலதிக நேர வேலை

கிழமை ஒன்றிற்கு 44 மணித்தியாலங்களுக்கு மேல் செய்யும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் உங்கள் வழமையான ஊதியத்தின் ஒன்றரை மடங்கு ஊதியம் வழங்கப்படல் வேண்டும். நீங்கள் மேலதிக வேலை நேரத்திற்குரிய ஊதியத்திற்குப் பதிலாக சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுப்பதற்கு நீங்கள் எழுத்துமூலம் சம்மதிக்கலாம். நீங்கள் மேலதிகமாக வேலை செய்த ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒன்றரை மடங்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு உங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். உங்களது முதலாளி உங்களது மேலதிக நேர வேலைக்கான ஊதியத்தினை சராசரி முறையிலான கணிப்பீட்டின்படி வழங்குகின்றரா? அவ்வாறாயின் உங்களுக்குக் குறைவான தொகையே வழங்கப்படும்.

## 10 நாட்கள் தனிப்பட்ட அவசர தேவையின் நிமித்தமான லீவு

ஒவ்வொரு வருடமும் தனிப்பட்ட அவசர தேவையின் நிமித்தம் 10 நாட்கள் லீவு எடுப்பதற்கு உங்களுக்கு உரித்து உண்டு. அதில் முதல் இரண்டு நாட்களுக்கும் உங்களது வழமையான சம்பளம் வழங்கப்படும். இந்த விடுப்பானது உங்களது சொந்த சுகயீனம், காயம் அல்லது மருத்துவ அவசரம் அல்லது உங்களது குடும்ப அங்கத்தவர்களின் மரணம், சுகயீனம், காயம், மருத்துவ அவசரம் அல்லது வேறொரு அவசர தேவை சம்பந்தப்பட்டதாத இருக்கலாம்.

இந்த 10 நாட்கள் தனிப்பட்ட அவசர தேவையின் நிமித்தமான லீவுக்கு உங்களது தொழில்தருநர் மருத்துவர் ஒருவரிடமிருந்து கடிதமொன்றினைக் கேட்க முடியாது. உங்களது தொழில்தருநர் இந்த லீவினை உங்களுக்கு வழங்கி ஆக வேண்டும். இந்த லீவினை எடுப்பதற்காக உங்களைத் தண்டிக்க இயலாது.

## குடும்ப அல்லது பாலியல் வன்முறைக்கான லீவு

நீங்களோ அல்லது உங்களது பிள்ளையோ குடும்ப அல்லது பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் போது, அல்லது அதற்குரிய பயமுறுத்தலுக்கு உள்ளாகும் போது 10 தனிப்பட்ட நாட்கள் லீவினையும், அதனை முன்னிட்டு 15 கிழமைகள் வரையான லீவினையும் பெற



தொழிலாளர்கள் நடவடிக்கை நிலையம்
ரொறன்ரோ: 416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
www.workersactioncentre.org

## ஒன்ராறியோவில் உள்ள அடிப்படை தொழில் நியமங்கள்

உரித்துடையவர்கள். ஒவ்வொரு கலண்டர் வருடமும் இதற்கான முதல் 5 நாட்கள் சம்பளத்துடன் கூடியது. மிகுதி நாட்கள் சம்பளமற்றது. ஒரே தொழில் தருநருக்குக் கீழ் ஆகக் குறைந்தது 13 கிழமைகள் தொடர்ந்தேர்ச்சியாக நீங்கள் அங்கு வேலை செய்திருந்தால் மட்டுமே இந்த லீவிற்கு நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள்.

### விடுப்பு

ஒரே தொழில் தருநருக்குக் கீழ் ஒரு வருடம் வேலை செய்ததன் பின்னர் நீங்கள் 2 கிழமைகள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுப்பதற்குத் தகுதி உடையவராகின்றீர்கள். உழைக்கப்பட்ட ஒவ்வொரு டொலருக்கும் 4 வீதத்தினை விடுப்பு ஊதியமாகப் பெறுவதற்கு உங்களுக்கு உரித்து உண்டு. நீங்கள் விடுப்பு எடுக்கும் போது இத்தொகை உங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். நீங்கள் 5 வருடங்கள் ஒரே தொழில்தருநருக்குக்கீழ் வேலை செய்த பின்னர் 3 கிழமைகளுக்கான விடுப்பினை 6 வீத விடுப்புத் தொகையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சம்பளக் காசோலையிலும் உங்களது 4 வீத விடுப்பிற்குரிய ஊதியத்தினையும், 5 வருடங்களின் பின்னர் 6 வீதமும் பெற்றுக் கொள்ள எழுத்தில் சம்மதிக்குமாறு உங்களது முதலாளி உங்களைக் கேட்டுக் கொள்ளலாம். என்றாலும் கூட நீங்கள் விடுப்பினை எடுப்பதற்கு உரித்துடையவர். விடுப்பினை எடுப்பதற்கு முன்னர் நீங்கள் வேலையிலிருந்து விலகுவதாக இருப்பின் விடுப்பிற்குரிய கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதனை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### பொதுவிடுமுறைகள்

ஒன்றாரியோவில் 9 பொதுவிடுமுறை நாட்கள் அமுலில் உள்ளன.

New Year's Day, Family Day, Good Friday, Victoria Day, Canada Day, Labour Day, Thanksgiving Day, Christmas Day, Boxing Day

உங்களது வழமையான வேலைக்கு முதல் உள்ள Shift உம் விடுமுறைக்கு அடுத்து வரும் shift உம் நீங்கள் வேலை செய்திருந்தால், பொதுவிடுமுறைக்குரிய வேதனத்தினைப் பெறத் தகுதி பெறுவீர்கள். பொதுவிடுமுறை தினத்திற்கு முன்னராக சம்பள காலத்தில் உழைக்கப்பட்ட உங்களது வழமையான ஊதியத்தினைக் கூட்டி வருகின்ற தொகையினை நீங்கள் அந்தச் சம்பளக் காலத்தில் வேலை செய்த நாட்களினால் பிரிப்பதன் அடிப்படையில் பொதுவிடுமுறைக்குரிய வேதனம் தீர்மானிக்கப்படுகின்றது. நீங்கள் ஒரு பொதுவிடுமுறைத் தினத்தில் வேலை செய்பவராக இருந்தால், நீங்கள் premium pay (செய்யப்படும் அனைத்து மணித்தியாலங்களுக்கும் வழமையான வேதனத்தில் ஒன்றரை மடங்கு வேதனம்) பெறுவதற்கும் பொதுவிடுமுறைக்கான வேதனத்திற்கும் எழுத்தில் உடன்படலாம். அல்லது நீங்கள் வழமையான வேதனத்தில் பொதுவிடுமுறையில் வேலை செய்வதற்கும், இன்னொரு நாளில் லீவு ஒன்றினை (time off) பொது விடுமுறைக்குரிய வேதனத்துடன் பெற சம்மதிக்கலாம்.

### வேலை நிறுத்தத்திற்குரிய முன்னறிவிப்புக் கடிதம் அல்லது அதற்குரிய கொடுப்பனவு

நீங்கள் 3 மாதத்திற்கும் குறைவாக வேலை செய்திருப்பின் உங்கள் முதலாளி உங்களை எந்தவித முன்னறிவிப்புமின்றி வேலை நிறுத்தம் செய்யலாம். 3 மாதகாலம் வேலை செய்திருப்பின் நீங்கள் எந்தத்திகதியில் வேலையிலிருந்து நிறுத்தப்படுவீர்கள் என்பதனை முதலாளி எழுத்தில் தரல் வேண்டும். உங்களுக்கு முன்னறிவித்தல் கிடைக்காத பட்சத்தில் நீங்கள் அதற்குரிய வேதனத்தினைப் பெறல் வேண்டும். நீங்கள் எவ்வளவு காலம் உங்களது முதலாளிக்காக வேலை செய்திருக்கின்றீர்கள் என்பதனைப் பொறுத்து வேலை நிறுத்தக் கொடுப்பனவு அல்லது அதற்குரிய முன்னறிவித்தல் தீர்மானிக்கப்படும். எவ்வாறாகினும் அதற்குரிய உச்சவரம்பு 8 கிழமைகளாகும். நீங்கள் ஒரு தற்காலிக ஏஜென்சி மூலமாக 3 மாதங்கள் அல்லது அதற்கு மேலதிகமான வேலை ஒன்றிற்கு அமர்த்தப்பட்டு, ஆனால் அதற்குரிய காலத்திற்கு முன்னராக இடைநிறுத்தப்பட்டால், நீங்கள் 1 கிழமைக்குரிய முன்னறிவித்தலினை அல்லது அதற்குரிய வேதனத்தினைப் பெற முடியும்.

### இச்சட்டத்திற்குக் கீழானவர்கள் யார்?

நீங்கள் பகுதிநேரம், தற்காலிகம், தற்காலிக ஏஜென்சி மூலமாக அல்லது எந்தவொரு வேலை அந்தஸ்தும் இல்லாமல் வேலை செய்தாலும் கூட தொழில் சட்டத்தின் பிரகாரம் உங்களுக்கு உரிமைகள் உண்டு. மாகாண அரசாங்கத்தின் தொழில் சட்டங்களை அமுலாக்கும் அமைச்சாக தொழில் அமைச்சு செயல்படுகின்றது. இங்குதான் தொழிலாளர்கள் தங்களுக்கு வழங்கப்படாத சம்பளத்திற்காகவோ அல்லது ஏதாவது மீறுதலுக்காகவோ தமது கோரிக்கையினை தாக்கல் செய்யலாம். இதன் சேவையானது இலவசமானதாகும். எல்லா ஊழியர்களும் இச்சட்டத்திற்குக் கீழ் சமமாகக் கருதப்படுவதில்லை. சில தொழிலாளர்களுக்கு, உதாரணமாக பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் நிலப்பரப்பு செய்பவர்கள், அடிப்படை வேதனம், மேலதிக நேர வேலை கொடுப்பனவு அல்லது பொதுவிடுமுறைக்கான

கொடுப்பனவுக்குரிய சமமான உரிமைகள் இல்லை. நீங்கள் ஒரு சுயதொழில் செய்பவராக இருந்தால், தொழில்சட்டத்தின்கீழ் கருதப்பட மாட்டீர்கள்.

நீங்கள் உண்மையில் ஓர் தொழிலாளியாக இருந்து, உங்களுக்குக்குறைவான தொகையினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு உங்களது முதலாளி உங்களை ஓர் சுய தொழிலில் ஈடுபட்டிருப்பவர் என அழைத்தால் அதனைத் தவறான வகைப்படுத்தல் (Misclassification) என அழைப்பர். இது சட்டத்திற்கு முரணானதாகும்.

அவ்வாறாயின் தொழில் அமைச்சில் ஓர் கோரிக்கையினை நீங்கள் தாக்கல் செய்யலாம். அல்லது உங்களுக்குச் சேரவேண்டிய ஏதாவது ஊதியத்திற்காக சிறிய முறையீடுகளுக்கான நீதிமன்றத்திற்கு (Small Claims Court) செல்லலாம். தொழில் அமைச்சிற்கு அழைப்பதன் மூலம் உங்களது தொழில் தொடர்பாக ஏதாவது சிறப்பு விதிகள் உள்ளனவா என அறிந்து கொள்ளலாம்.

## தொழில் உரிமைகள் தொடர்பான தகவல்கள்

உங்களது தொழில்தருநர் உங்களது வேலைத்தலத்தில் அனைவரும் பார்க்கக் கூடிய ஓர் இடத்தில் தொழில் சட்டங்கள் தொடர்பான சுவரொட்டி ஒன்றினை வைத்திருத்தல் வேண்டும். இச்சுவரொட்டியானது \\ஒன்றாரியோவின் தொழில்சட்டங்கள் தொடர்பாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகள் யாவை" என அழைக்கப்படும். ஒவ்வொரு புதிய தொழிலாளிக்கும் இச்சுவரொட்டியின் ஒரு பிரதியினை தொழில்தருநர்கள் வழங்குதல் வேண்டும்.வேலைக்கு அமர்த்தப்பட்டு 30 நாட்களுக்குள் இதனை நீங்கள் பெற்றிருத்தல் வேண்டும். இச்சுவரொட்டியினை உங்களது சொந்த மொழியில் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

## 2019 இல் வருகின்றவைகள்:

பொதுவான அடிப்படைச்சம்பளம் டொலர் 15:

- 18 வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் டொலர் 14.10
- மதுபானம் பரிமாறுபவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் டொலர் 13.05

வேலை அட்டவணையில் நியாயம்:

- உங்களது முதலாளி 4 நாட்களுக்குக் (96 மணித்தியாலங்கள்) குறைவான காலத்தில் உங்களை வேலைக்கு அழைப்பவராக இருப்பின் அதனை மறுப்பதற்கு உங்களுக்குத் தொழில் பாதுகாப்புடனான உரிமை உண்டு.
- ஒரு கம்பனியில் 03 மாதங்கள் வேலை செய்தபின் வேலை அட்டவணையில் அல்லது வேலை செய்கின்ற இடத்தில் ஒரு மாற்றத்தினை வேண்டி நீங்கள் கேட்டுக் கொள்ள தொழில்பாதுகாப்புடனான உரிமை உண்டு.

## ஒன்ராறியோவில் உள்ள அடிப்படை தொழில் நியமங்கள்

- ஒரு வேலையினை 2 நாட்களுக்குக் (48 மணித்தியாலங்கள்) குறைவான காலப்பகுதியில் இரத்துச் செய்தால், 3 மணித்தியாலங்களுக்குரிய ஊதியத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.
- அழைப்பு தயார் நிலையில் (On - Call) வைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் வேலைக்கு வருமாறு கேட்கப்படாதவிடத்து அல்லது 3 மணித்தியாலங்களுக்குக் குறைவான வேலைக்கு அழைக்கப்பட்டால், அவர்களுக்கு 3 மணித்தியாலங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

## உதவியும் அதற்கான மூலங்களும்:

**தொழிலாளர்கள் நடவடிக்கை நிலையம் (Workers' Action Centre)**

ஒன்றாரியோவில் உங்களை வேலைத்தலத்தில் பாதுகாக்க வேறும் சில சட்டங்கள், உதாரணமாக ஒன்றாரியோ மனித உரிமைகள் சட்டக்கோவை அல்லது வேலை செய்யும் இடத்தில் உடல் நலம் மற்றும் பாதுகாப்பினைப் பேணும் சட்டங்கள் உள்ளன.

செலுத்தப்படாத வேதனத்திற்காக சட்டத்தரணி ஒருவரை அமர்த்தல் அல்லது சிறிய கோரிக்கைகளுக்கான நீதிமன்றங்களை நாடுதல் போன்ற தெரிவுகளும் உண்டு. உதவிக்காகவும், சிபாரிசுகளுக்காகவும் எமது தொழிலாளர்கள் நடடிக்கைகள் நிலையத்தின் உடன் தொலைபேசிக்கு அழையுங்கள். எமது இணையத்தளத்திலுள்ள தகவல்தாள் பலவித தொழில் தொடர்பான பிரச்சனைகளுக்கு தகவல்களை வழங்குகின்றது.

**416-531-0778**

**www.workersactioncentre.org**

**தொழில் அமைச்சு**

தொழில்சட்டத்தின் கீழ் உங்களுக்குள்ள உரிமைகளுக்கும் ஓர் கோரிக்கையினை எவ்வாறு தாக்கல் செய்யலாம் என அறியவும், தொழில் அமைச்சினைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களது வழங்கப்படாத ஊதியத்தினைக் கணக்கிடுவதற்கு இவர்களது இணைத்தளத்திலுள்ள பல கணக்கீட்டு கருவிகள் உங்களுக்கு உதவி செய்யும்.

**1-800-531-5551**

**www.labour.gov.on.ca**

தொழிலாளர்கள் நடவடிக்கை நிலையம்
ரொறன்ரோ: 416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
**www.workersactioncentre.org**